எந்தெந்த நாடுகளில் உள்ள நூலகங்களில் அது இடம் பெற்றிருக்கிறது என்று தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பிற பல்கலைக் கழகங்கள், பிற நாடுகளிலிருந்து இந்தக் கலைக்களஞ்சியத்தைப் பெற விரும்புகிறபோது அவைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. பல பல்கலைக்கழகங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அமெரிக்கா போன்ற இடங்களில், அமெரிக்காவில் பி.எல். 480 திட்டத்தின்கீழ் வந்திருக்கிற நிதியில் இருந்து புத்தகங்கள் வாங்கி அனுப்புவது என்ற முயற்சியில் கிட்டத்தட்ட ஐந்நாறு பல்கலைக் கழகங்களுக்கு இங்கிருந்து தமிழ் நூல்கள் மட்டும் பத்து, பதினைந்தாயிரம் நூல்கள் போய் இருக்கின்றன. அதில் ஐந்நாறு இந்த கலைக்களஞ்சிய நூல்களும் கூட சேர்ந்து போயிருக்கின்றன. குறிப்பாக, வாஷிங்டன் லைப்ரரி, சிக்காகோ பல்கலைக்கழக லைப்ரரி, பெர்க்லி பல்கலைக்கழக லைப்ரரி போன்ற ஐந்நாறுக்கு இவர்கள் வாங்கி அனுப்பி வைத்திருக்கிறார்கள். அதில் கலைக்களஞ்சியமும் சேர்ந்திருக்கிறது.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, கலைக்களஞ்சியத்தின் முதல் தொகுப்பில் 'அ' வரிசையில் அறிஞர் அண்ணாவைப் பற்றிய குறிப்பு இல்லை என்பதை அரசு அறியுமா? அந்தக் குறையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, முதலிலே சொல்லியபடி அந்தக் குழுவின் தலைவருக்கு இந்தக் குறையைப் பற்றி எழுதியனுப்பினால், அவர்கள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

சென்னையில் உலகத் தமிழாராய்ச்சி நிலையம்

* 263 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னையில் அமையவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி நிலையத்திற்கு திருவள்ளுவரின் பெயர் சூட்டும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி நிலையத்தின் தலைமைப் பொறுப்பை தமிழ் நாட்டைச் சேர்ந்த

1972 மார்ச் 1]

தமிழ் அறிஞர் ஒருவருக்கு வழங்கப்படவேண்டுமென்று அரசு வற்புறுத்துமா? மேலும், அங்கேயுள்ள தமிழ் அறிஞர்கள், டாக்டர் கலைஞர் அவர்கள் அண்மையில் குறிப்பிட்டதுபோல், ஆராய்ந்த வற்றையே மேலும், மேலும் ஆராய்ந்து கொண்டிராமல், புதிய சிந்தனைகளை உணர்த்தும் வகையில் ஆராய்ச்சி நடத்தும்படி அந்த நிலையத்திற்கு யோசனை கூற அரசு முற்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இண்டர்நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டமில் ஸ்டடீஸ், உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளில் கற்பிக்கும் லிங்குவிஸ்டிக்ஸை அனைத்தையும் இணைக்கும் நிலையமாக அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், உலகத்திலுள்ள மொழியியல் ஆராய்ச்சியாளர்களும், உலகத்திலுள்ள மொழிகளோடு தொடர்புடையவர்கள் பலரையும் வைத்துக்கொண்டு மொழிகளின் மேம்பாட்டை ஆராய்ச்சி செய்வதற்கான அடிப்படையில் அது அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் தமிழ் மொழி மேலும் வளம் பெறுவதற்கும், வளப்படுத்துவதற்கும், தமிழ் மொழியின் சிறப்பை உலகுக்கு பயன்படுத்துகிற வகையில் அமைப்பதற்கும் ஆராய்ச்சிகள் நடத்த, பல்வேறு வகைப்பட்ட பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த வேலை தொடங்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டிலிருந்து ஓரிரு துறைகளில் அதனுடைய பணிகள் தொடங்கும்.

தற்காலிகமாக, மதுரைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் அதனுடைய கௌரவ இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பொறுப்பில் வேறு பல தமிழ்மொழி ஆராய்ச்சியாளர்களும், தமிழ் நன்கு அறிந்தவர்களும், உலகப்புகழ் பெற்றவர்களும் இடம்பெறுவார்கள். அவர்களுடைய தலைமையின் கீழ் அந்த நிலையம் சிறப்பாக பணியாற்றும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

மாட்டின வளர்ச்சி

* 264 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் மாட்டின வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் ஆஸ்திரேலிய ஜெர்சி காளைகளை மற்ற மாவட்டங்களுக்கும்